REGD. NO. M. 6311 ★ P.I. தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 18உ வெள்ளி (1—3—57) ★ ★ வெளியூர்: மாசி 19உ சனி (2—3—57) [இதழ் 226

நமது 'போஸ்டர்'கள்-'அவசரத் தந்தி'கள்!

ஈரோடு, பிப். 27—

"தேர்தலையொட்டி தி. மு. கழகம் வெளியிட்டுள்ள சுவரொட்டிகள் மிகவும் சக்திவாய்ந்த—மக்களின் சிந்தனையைத் தூண்டும் கருவியாக அமைந்துள்ளன. இந்தப் 'போஸ்டர்கள்' புரியவில்லை என்று அமைச்சர் கூறினாலும் அது பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஆனால், அதில் அடங்கியுள்ள அருமையான கருத்துக்களை மக்கள் நன்கு புரிந்துகொண்டு வருகின்றனர்; ஆனால் அவை காங்கிரஸ் ஆட்சிக்கு அனுப்பப்படும் 'அவசரத் தந்திகள்' போல் உள்ளன" என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் கூட்டம் அற்புதமான ஆற்றல் கொண்டது

பக்குவமாக வேலை செய்து பயன் பெறுவீர்

கழகத் தோழர்களுக்கு அண்ணா கனிவுரை

'அடுக்குச் சொல் சோறு போடுமா?' என்று, கேலி பேசுவோருக்கு, நடந்த 23—2—57 அன்று சென்னை—சிந்தாதிரிப்பேட்டை தேர்தல் கூட்டத்தில், தக்க பதில் தந்தார் அண்ணா.

காமராசரின் கரத்தை வலுப்படுத்துவது எத்தனை ஆபத்து என்பதை விளக்கினார், அண்ணா.

கழகக் கூட்டங்களில் கூடும் மக்களைக் கேலி பேசுவோருக்கு, சாட்டையடி தந்தார், அண்ணா. அண்ணா அவர்களின் சொற்பொழிவின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன; இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது:—

போஸ்டர்! போஸ்டர்!

"தேர்தல் பிரச்சாரத்திற்கு என்று 'போஸ்டர்'கள் தயாரிக்கும்போது, அவை இந்த அளவுக்குப் பலன் தரும் என்று நான் எண்ணவில்லை. பலன் தரும் என்று தெரிந்துதான் 'போஸ்டர்'கள் தயாரித்தோம்; ஆனால், நாம் எதிர்பார்த்த பலனைவிட அதிகமான பலனை இந்தப் 'போஸ்டர்'கள் தந்திருக்கின்றன.

"இன்று நமது கழகத்தை எதிர்த்துப் பேசுகிறவர்கள் எல்லாம் நாம் வெளியிட்ட 'போஸ்டர்'களைப் பற்றியல்லவா பேசுகிறார்கள்?

அடுக்கு மொழி!

"பேசுகிறவர்கள் எல்லாம் என்ன பேசுகிறார்கள்? 'இவர்கள் அடுக்கு மொழி பேசிவிட்டால் ஆகிவிடுமா?'—என்றுதான் பேசுகிறார்களே தவிர, அந்த அடுக்கு மொழிகளுக்குள் இருக்கும் அரசியல் தத்துவம் இவர்களுக்குப் புரியாமல் போனதேன்?

தடுக்கு மொழி!

"நாம் பேசுவது அடுக்குமொழி என்கிறார்கள். அடுக்குமொழி ஒன்றும் அர்த்தமில்லாத மொழி அல்லவே! இவர்கள்—காமராசர்கள் பேசுகிறமொழி என்ன மொழி என்று கேட்டால் 'தடுக்கு மொழி' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவர்களுக்குக் கோர்வையாகத் தமிழ் பேசத் தெரியவில்லை; திக்கித் திக்கி திண்டாடிப் பேசுகிறார்கள்; அதனால், 'அடுக்குமொழி — தடுக்குமொழி' என்று கூறுவதைக்கூட, 'இதிலும் கூடவா அடுக்குமொழி பேசுகிறார்கள்' என்று அவர்கள் அங்கலாய்க்கக் கூடும்!

அரசியல் தெளிவு!

"ஆனால், நமது 'போஸ்டர்'கள் மக்களுக்கு நல்ல அரசியல் தெளிவூட்டக் கூடியனவாகும்.

"'தங்கம் விளையும் நாட்டில் தரித்திரம் எதனாலே?'—என்று நாம் ஒரு 'போஸ்டர்' போட்டிருக்கிறோம்; இதனை, 'இதென்ன அடுக்குமொழி?' என்று கேலி பேசிவிட்டால், அது அரசியல் ஆகாது!

"இந்த நாட்டில் தங்கம்தான் கிடைக்கவில்லையா? அல்லது தரித்திரம்தான் நிலவவில்லையா? தங்கமும் விளைகிறது; தரித்திரமும் நிலவுகிறது! இல்லை என்று சொல்லட்டுமே கேலி பேசுவோர்.

"இப்படி ஒரு போஸ்டரை, சகாரா பாலைவனத்தில் கொண்டு போய் ஒட்டினால், 'இதென்ன அநியாயம்? இத்தனை பெரிய புளுகு?'—என்று கேட்கலாம். ஆனால், தென்னாட்டில் தங்கம் விளைகிறது என்பது பொய்யா? அல்லது, 'இருந்தும் இங்கு தரித்திரம் நிலவுகிறது' என்று கூறுவதுதான் பொய்யா? இந்த நாட்டு மக்கள் என்ன—உப்பரிகையில் உல்லாசமாக உலவித்திரியும் சந்தோஷமான வாழ்வா பெற்றிருக்கிறார்கள்? இல்லையே! தரித்திரத்தில்தானே உழலுகிறார்கள்! 'இது என்?' என்று கேட்கிறது தி. மு. கழகம்—பதிலும் சொல்லுகிறோம்—'தங்கம் விளையும் நாட்டில் தரித்திரம் எதனாலே? டில்லி தர்பாரைத் தட்டிக்கேட்காததாலே!'— என்கிறோம்! இல்லை என்கிறார்களா? 'தரித்திரத்திற்குக் காரணம், டில்லி தர்பாரைத் தட்டிக் கேட்காததால் அல்ல என்று கூறுவார்களேயானால், அவர்கள் எவ்வாறு நல்ல அரசியல்வாதிகளாயிருக்க முடியும்? இப்படி, நாம் கூறுவதை அரசியல் ரீதியாக மறுத்துரைக்காமல் 'அடுக்கு மொழி பேசிவிட்டால் ஆகிவிடுமா?' என்று கேட்டால் என்ன அரசியல் அது?

ஊதல்! ஊதல்!

"'நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டடித்தால் போதாது,' என்கிறோம், நாம்! தவறு என்கிறார்களா? Inflation என்று ஆங்கிலத்தில் கூறப்படுகிற—பணம் இல்லாதபோது, இருப்பதாகப் பாவனை செய்ய நோட்டு அச்சடித்து பண வீக்கத்தை உண்டுபண்ணுதல் கூடாது—ஊதல் ஆகாது என்கிறோம். இந்தப் பொருளாதாரத் தத்துவத்தை இப்படி குறள் போலச் சுருக்கமாக எடுத்துக்காட்ட, 'நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டடித்தால் போதாது' என்ற வாசகத்தைவிட வேறு கூறுங்களேன்! வாசகம் பெரிதானால் 'போஸ்டர்' பெரிதாகிறது; 'போஸ்டர்' பெரிதானால் பணம் அதிகமாகிறது; பணம் அதிகமானால், நமது நாவலர் முகம் சுளிக்கிறார்! நாவலர் முகம் சுளித்தால் போஸ்டர் வெளிவராது! 'போஸ்டர்' வெளிவர வேண்டுமானால், நாவலர் முகம் மலர்ந்திருக்கவேண்டும்! அதற்கு போஸ்டரைச் சுருக்குவதைத் தவிர வேறு வழியில்லையே!

"இந்தப் போஸ்டர்களில் உள்ள அரசியல் தத்துவத்தை உணர்ந்தும் உணராதவர்போல கேலி பேசுவோரைப்பற்றி நமக்குக் கவலை இல்லை!

சிந்திரியும் முந்திரியும்

"'சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே! முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே!'—என்கிறோம் நாம், இன்னொரு போஸ்டர் மூலம்! இல்லை என்று கூறட்டுமே, கேலி பேசுவோர்! சிந்திரியில் உர உற்பத்தித் தொழில் சிறந்து ஓங்கி வளரவில்லையா? அல்லது தென்னாட்டில் முந்திரிப் பருப்பிலிருந்து எண்ணெய் எடுத்தல், முந்திரிப் பருப்பை வறுத்துப் 'பாடம்' செய்து ஏற்றுமதி செய்தல் போன்ற தொழில்கள் படிப்படியாகச் சிதையவில்லையா? இல்லை என்று கூறட்டுமே!

"எனவே, நாட்டில் நிலவும் நிலைகளை நாம் தெளிவாக எடுத்துச் சொல்லி மக்களிடத்தில் ஓட்டுக் கேட்கிறோம். அதனை, உணரவேண்டும் காங்கிரசாரும், ஏனையோரும்!

"காமராசர் ஆட்சியில் கொடுமைகள் பல இருந்தாலும், அவர் பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகங்கள் கொடுத்தார்—என்று பெரியார் பேசுகிறார். இது எனக்கு ஒரு புராணக் கதையைத்தான் நினைவூட்டுகிறது.

"ஒருவன் — பெரிய பாவி, மேலுலகத்தில் எமன்முன் நிறுத்தப்பட்டானாம்; சித்திராபுத்திரன், 'இவன் ஒரு பெரிய பாவி; பஞ்சமாபாதகம் அத்தனையும் புரிந்தவன்' என்று கணக்குக் கூறினானாம்; 'அப்படியானால் இவனை நரகத்தில் தள்ளுங்கள்' என்றானாம், எமன்! உடனே சித்திராபுத்திரன், 'இவன் இத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும் ஒரே ஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்' என்றானாம்! 'என்ன அது?' என்று எமன் கேட்டபோது, சித்திராபுத்திரன், 'இந்த மனிதனை, ஒருநாள் ஒரு கிழவி கோவிலுக்குப் போக வழி கேட்டபோது, இவன், 'அதோ, அந்தப் பக்கமாகப் போ' என்று விரலைக் காட்டிக் கூறினான்; இந்த ஒரு புண்ணியம் அவன் செய்திருக்கிறான்' என்றானாம்! 'அப்படியானால், இவனது அந்த விரலுக்கு மட்டும் பன்னீர் தெளித்து சந்தனம் பூசி சொர்க்கத்திற்கு அனுப்பு; இவனை நரகத்தில் தள்ளு' என்றானாம் எமன்!

"இந்தப் புராணக் கதையையா அரசியலில் கொண்டு வருவது? அதுவும், தமிழ் நாட்டின் பகுத்தறிவுத் தந்தையா அப்படிச் செய்வது?

"காமராசர் கரத்தை வலுப்படுத்தாதீர் என்கிறேன் நான்; வலுப்படுத்தினால், அந்த வலுவான கரம் நாளை உங்கள் மீதே திரும்பாது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

"பத்மாசூரன் என்பவன் தவம் செய்து, பரமசிவனிடத்தில் ஒரு வரம் வாங்கிக் கொண்டானாம்; இதுவும் புராணக் கதைதான்! அதாவது—'அவன் யார் தலையில் கைவைத்தாலும், அவர்கள் சாம்பலாகி விடவேண்டும்' என்பது அந்த வரம்! பரமேசுவரனும் முன்பின் யோசியாமல், அந்த வரத்தை அருளினாராம்! உடனே பத்மாசூரன், வரம் தந்த பரமேசுவரன் தலையிலேயே கை வைத்து, வரம் பலிக்கிறதா என்று பார்க்க நினைத்தானாம்! உடனே பரமேசுவரன், ஓடி ஒளிந்துகொண்டாராம்! அப்போதுதான் அவர், தான் தந்த வரம் எத்தனை ஆபத்தானது என்பதை உணர்ந்தாராம்; பின், எல்லாம் வல்ல விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து நாட்டியமாடி பத்மாசூரனை மயக்கி, அவன் தன் தலையிலேயே தன் கையை வைத்து நாட்டியமாடுமாறு செய்து பஸ்பமாக்கினாராம்!

"அதுபோல பெரியார், காமராசரின் கரத்தை வலுப்படுத்தி, நாளை காமராசர் அந்த வலுவான கரத்தைப் பெரியார் மீதே திருப்பினால், நானா மோகினி அவதாரம் எடுப்பது? அந்த வேலையையும் எனக்கா தருவது?

"எனவேதான், 'காமராசர் கரத்திற்கு வலுவூட்டாதீர்கள்,' என்று கேட்டுக்கொள்கிறேன்.

"நாட்டு மக்கள் நிச்சயமாக இன்று, ஓர் அரசியல் மாறுதலை விரும்புகிறார்கள். 'நல்லதோர் எதிர்க்கட்சி தேவை,' என்பதை உணருகிறார்கள். அந்த எதிர்க்கட்சி தி. மு. கழகமாகத்தான் இருக்கமுடியும் என்றும் திடமாக நம்புகிறார்கள்.

"அதனால்தான், இங்கே இப்படிப் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். இந்தக் கூட்டம்—இந்த மக்கள் சக்தி ஒன்றும் வீணானது அல்ல!

"லலிதா பத்மினிக்குக்கூடத்தான் கூட்டம் கூடுகிறது—என்று கூறினாராம், எனது கம்யூனிஸ்டு நண்பர் இராமமூர்த்தி! 'உண்மைதான், நான் மறுக்கவில்லை; ஆனால் லலிதா, பத்மினிக்கு மட்டும் இப்படிக் கூட்டம் வருகிறது; நான், 'ஆடலழகி' என்றுகூடப் பெயர் வைத்திருக்கிறேன்; என் நிகழ்ச்சிக்கு என் கூட்டம் வர மாட்டேன் என்கிறது,' என்று அங்கலாய்த்துக்கொள்ளும் 'ஆடலழகி'போல இருக்கிறது இராமமூர்த்தியின் பேச்சு! இங்கே நாம் பேசுவதைக் கேட்கக்கூடும் மக்கள், மாற்றுக் கட்சிக்காரர்களின் கூட்டத்திற்கும் வரவேண்டுமே! ஏன் வரவில்லை?

"அவர்கள், மக்களுக்குத் தேவையானதைத் தரவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் மக்களின் தேவைகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவில்லை; புரியாததற்குக் காரணம், சிந்திக்கவில்லை; சிந்திக்க அவர்களது தலைமை விடவில்லை. இவர்களில் சிலர் டில்லிக்கும், சிலர் மாஸ்கோவிற்கும், சிந்திக்கும் வேலையைத் தந்துவிட்டவர்கள்!

"இந்த மக்கள் சக்தி அற்புதமான ஆற்றல் படைத்தது. பக்குவமாக வேலை செய்து தோழர்கள், அந்த ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லா வாக்காளரையும் ஓட்டுச் சாவடிக்கு அழைத்து வருவதில்தான், வெற்றி இருக்கிறது."

சென்னையில் அண்ணா

சென்னை நகரத்தில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து **அண்ணா** அவர்கள் 4-3-57 அன்று மாலை 6½ மணி முதல் இரவு 12 மணி வரை பல போதுக் கூட்டங்களில் கலந்துகொள்வார். விவரம் நாளை அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

சென்னையில் எம்.ஜி.இராமச்சந்திரன்

புரட்சிநடிகர் தோழர் **எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்கள் சென்னை நகரத் தொகுதிகளில் போட்டியிடும் கழக அபேட்சகர்களை ஆதரித்து 5-3-57 அன்று நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வார். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

கடலூர் வட்டத் தோழர்கட்கு

முக்கிய அறிவிப்பு

புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 2-3-57ல் கடலூரில் கலந்துகொள்ள இருந்த தேர்தல் பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. 6-2-57 அன்று கடலூர் வட்டத்திற்கு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் வர இருக்கிறார். எனவே, அன்று சிதம்பரம், கடலூர், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி ஆகிய நான்கு இடங்களில் மட்டும் பொதுக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—3—57 வெள்ளி

வெற்றி நமதே!

நமது முன்னேற்றக் கழகத்தின் தீவிர வளர்ச்சி கண்டும், அதே நேரத்தில் தாங்கள் மடமடவெனச் சரிந்துபோனது கண்டும் நம்மீது ஆத்திரங்கொண்டிருப்போர், எப்பொழுதும் தொடுத்துவரும் தூற்றல் சொல்லம்புகளை, நாம் நேரடியாகப் பங்கு கொண்டுள்ள இந்தத் தேர்தல் நேரத்தில் முன்னிலும் கூடுதலாகவும் கடுமையானதாகவும் ஏவிடத்தான் செய்வர் என்ற உண்மையை நாம் ஏற்கனவே எதிர்பார்த்ததுதான். எனவே, எதிர்பார்த்த ஒன்று நடைபெறுகின்றபொழுது அதுகண்டு நாம் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ படுவதற்கில்லை.

அந்தப் பொறுமைக்காரர்கள் நம்மீது ஏவிவந்த வசைச்சொற்களே நமது வளமான வளர்ச்சிக்கு வழி செய்திருக்கும் உண்மையை நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், அவர் வசை மொழியாது இருந்துவிட்ட வினாடிக்காகநாம் வருந்தி இருப்பதுடன் தொடர்ந்து தீவிரமாக வசைபாட மாட்டார்களா என்றும் நாம் ஏங்கி இருக்கின்றோமேஅல்லாது அவ்வழுக்காறு நாவினரின் நச்சுச் சொற்களுக்கு தளர்ந்ததுமில்லை—வெகுண்டு எழுந்ததுமில்லை. நமது கழகத்தின் ஆக்கத்திற்கு அருந்துணையாக அமைந்துவரும் அவ்வசவாளர்களின் வாய் மொழியை, என்றும்போல் இனியும் இரு கையேந்தியே வரவேற்கக் காத்துக் கிடக்கிறோம்.

அவ்வசவாளர்கள் போன்றே தேர்தலில் கலந்துகொண்டுள்ள காங்கிரசு உள்ளிட்ட பிற அரசியல் கட்சிகளும் தேர்தல் காலசிந்து பாடிகள் சிலரும், அரசியல் குறிக்கோள் எதுவுமின்றி தங்கள் ஆசையையும் ஆணவத்தையும் மட்டுமே அரசியல் அடிப்படையாகக்கொண்டு பொதுவாழ்வைக் களங்கப்படுத்திவரும் சிலரும், இந்தத் தேர்தல் நேரத்தில் தங்கள் இயல்பை, பொதுமக்கள் பரிகசிக்கத்தக்க அளவில் வெளிப்படுத்திக்கொண்டுவருகின்றனர். நமது கழகத்தை நினைத்துக்கொண்ட மாத்திரத்திலேயே இவர்களுக்கு நெஞ்சரிப்பு ஏற்பட்டுவிடுகிறது. அதன் விளைவாக நமது கழக முன்னணி வீரர்கள் அனைவரையும் தனித்த முறையில் தாக்குவதிலும் எள்ளிநகையாடுவதிலும் தொடங்கி இறுதியாகக் கழகக் கோட்பாடுகளையும் தாங்கள் தெரிந்துகொண்டுள்ளவண்ணம் களங்கப்படுத்திக் கூறுவதில் முடிக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் ஏன் ஒரே பாதையில்—அதுவும் தேய்வுப் பாதையில் விரைந்து சென்றுகொண்டு இருக்கின்றனர் என்பதற்குரிய உண்மையை நாம் அறிந்தே இருக்கின்றோம். ஒருகாலத்தில் பற்றும் பாசமும்—ஏன்—பக்தியும் விசுவாசமும்கூடக் கொண்டிருந்த பொதுமக்கள், இவர்களை அலட்சியப்படுத்த முன்வந்துவிட்டதுடன் நில்லாது, வெறுத்து ஒதுக்கித் தள்ளவும் தொடங்கிவிட்டனர். தாங்கள் தீவிரமாக அலட்சியப்படுத்தப்பட்டு வருகின்ற அதே நேரத்தில், ஒரு காலத்தில் தங்களை வாழ்த்தி வரவேற்றத் தமிழ் மக்கள் பெருங்கூட்டம் வேறு ஒரு அணியில் ஒருங்கு திரண்டு நிற்பதைக் காண்கின்றனர். அந்த அணியைப் பெரிதாக்க மேலும் மக்கள் ஆர்வத்துடன் விரைவதையும் பார்க்கின்றனர்.

அவ்வாறு மக்களைத் தன்னகத்தே திரட்டிக்கொண்டு வரும் அணியாக, நமது முன்னேற்றக் கழகம் உதய சூரியன் போல் ஒளி பரப்பி நிற்பதைக் காண்கின்றனர். குறுகியகால அளவிற்குள்ளாக நமது கழகம் அருகுபோல் வேரோடி ஆல் போல் தழைத்து ஓங்கிவளர்ந்து வருவதற்குரிய உள்ளடக்கத்தை ஆராய இயலாதவர்களாக—மனமற்றவர்களாக — கழகத்தின் முன்னணி வீரர்களால் மட்டுமே இந்த வளர்ச்சி உருவெடுத்திருக்கின்றது எனத் தவருகத் தீர்மானித்துக் கொண்டும் அவர்களைத் தனித்த முறையில் இழித்தும் பழித்தும் பேசிவிடுவதின் மூலமே கழகத்தைச் சரித்துவிடுவது சாத்தியமாகக் கூடும் என உறுதி செய்துகொண்டும் தங்கள் தூற்றல் பணியை, இந்தத் தேர்தல் நேரத்திலும் அவர்கள் தீவிரமாக ஆற்றிவருகிறார்கள். அவர்கள் நிலை கண்டு நாம் பரிதாபப் படுகிறோம்.

வரலாறு கண்ட ஒரு பெரும் மனிதப் பிரிவின் உரிமை உணர்வு, நமது கழகத்தின் இதயம்—அதுவே நமது மூல பலம் என்பதை இதுவரை உணரத் தவறி இருந்தாலும், அறிய மனமில்லாது இருந்தாலும், இனியாவது விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். அவர்கள் போகின்ற பாதை, மக்களை அலட்சியப்படுத்திவிட்டு தன்னலம் தேடும் தவறுடைய பாதையாகும். அந்தப் பாதையில் என்றைக்கு அவர்கள் முதலடி எடுத்துவைத்தார்களோ, அதே விநாடியில், அவர்களுடைய சரிவும் அவர்களை நிழல் போல் தொடரத் தொடங்கிவிட்டது. அவர்கள் தவறான பாதைவழி செல்லுகிறார்கள் என்பதை, என்று மக்கள் அறியத் தொடங்கினார்களோ அதே விநாடி அவர்களை அலட்சியப்படுத்தவும் தயங்கித் தயங்கி மக்கள் முன்வரத் தொடங்கினர்.

நமது எதிர்ப்பாளர் குறித்தும், இந்தத் தேர்தல் நேரத்தில் அவர்கள் புரிந்துவரும் ஏசல் பணி குறித்தும், இப்பொழுது எழுதுவது, நமது கழகத் தோழர்கள் நமது கருத்தைச் செலுத்தக்கூடாது என்பதை அறிவுறுத்துவதற்கேயாகும். கோபம் மூட்டப் பேசினால், ஆத்திரம் தோன்ற ஆர்ப்பரித்தால், தங்கள்பால் கழகத்தவர் சீற்றங்கொள்வர்—தேர்தல் பணியினை மறப்பர்—அதன் பலனாக தங்கள் வெற்றிக்கு வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்கக்கூடும் என்றக் கெடு நினைப்பில் அவர்கள் நமது கழகத் தலைவர்களை ஏசும் வழக்கமான செயலை, இப்பொழுது கொஞ்சம் தீவிரமாக்கியுள்ளனர்.

இதுவரை, அவர்கள் அனைவரும் நம்மைத் தாக்கிவந்துள்ளனர்; அவ்வளவையும் நாம் தாங்கி வந்துள்ளோம். அவை தந்த தழும்புகள் நமது கழகத்தவர் ஒவ்வொருவர் உடலிலும் நிரம்ப உள்ளன.

அத்தாக்குதல்களை தாங்கிக் கொண்டதால், அவர்கள் எதிர்பார்த்ததுபோல் நாம் சாய்ந்துவிடவுமில்லை — வளர்ந்தோங்காமல் சரிந்துவிடவுமில்லை; ஆனால் அதே நேரத்தில், நம்மைத் தாக்கியவர்கள்—இப்பொழுதும் நம்மைத் தாக்குவதில் மனச்சாந்தியும் மகிழ்ச்சியும் கண்டுவரும் அவர்கள், புகழேணியில் இருந்து வீழ்ந்து, பொதுமக்களுக்கு நகைப்பூட்டும் உயிர்களாக நடமாடிக்கொண்டிருக்கும் பரிதாபத்தைக் கண்டுவருகிறோம்.

ஒருவருக்குப் புகழும் இகழும், தான் தேடிக்கொள்ளக் கூடியவையே அல்லாது பிறர் தரும் தானத்தால் உருவாகக் கூடியதன்று. இப்பேருண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

புகழ் தரும் செயலிலேயே, என்றும்போல் இன்றும் நாம் செயல்பட வேண்டும். இகழ் அளிக்கும் இழிசெயலை நாம் நெஞ்சினாலும் இப்பொழுதும் தீண்டக்கூடாது.

நாம் தேர்தலில் ஈடுபட்டிருப்பது வெற்றி தோல்வியைப் பெரிதெனக் கொண்டு அல்ல. இவ்வாறு கூறப்படுவதினால், நாம் வெற்றியை விரும்பவில்லை என்பதல்ல பொருள்.

புனிதமான சனநாயகக் கடமையை நிறைவேற்றவே நாம் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை, ஒருமுறை அல்ல பன்முறை, நமது பேராசிரியர் அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் தெளிவு பெறத் தெரிவித்திருக்கிறார். அதை நாம் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

இந்தத் தேர்தல் நேரத்தில் மாற்றுக் கருத்தினர் அல்லது தேர்தல் கால வசவாளர்கள் கூறும்ஏசல் மொழிகளுக்கு நாம் செவிசாய்ப்பது, நாம் மேற்கொண்டுள்ள சனநாயகக் கடமையை சீரழிக்கக் கூடியதாகும்; நமக்கு இருக்கும் வெற்றி வாய்ப்பைக் கெடுக்கக்கூடியதுமாகும்.

நாட்டு மக்கள் உள்ளனர், சிந்தித்து செயலாற்றவும்—தீர்ப்பளிக்கவும். இந்தத் தேர்தலில் நம்மை வரைமுறையில்லாது ஏசிவரும் வசவாளர்களுக்கு, அவர்கள் கண்டிப்பாக பரிசளித்தே தீருவர். பொதுமக்களுக்கு உள்ள அப்பொறுப்பில் நாம் தலையிடத் தேவையேயில்லை.

வெற்றி நமதே!

ஏன் தெரிவிக்கவில்லை?

நிறுவப்படும் தொழிற்சாலை எங்கே அமையும்?

ஆண்டுக்கு 30,000 டன் நிலக்கரியை தோண்டி எடுக்கக்கூடிய சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவ சோவியத் நிபுணர்குழு ஒன்று சிபாரிசு செய்துள்ளதாம்; ரூ. 13,20,00,000 செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்படுமாம்.

ஆனால், இந்தத் தொழிற்சாலையை எங்கு நிறுவப்பட வேண்டும் என்பது பற்றி அந்த நிபுணர் குழு தெரிவிக்கவில்லையாம்!

‘காங்கிரஸ்காரர்களின் கட்சிப்பற்றும் அரசியல் நாகரீகமும்’!

காஞ்சியில் அண்ணா கருத்துரை

கடந்த 22-ந் தேதியன்று நடைபெற்ற காஞ்சீபுரம் தியாகராயர் மன்ற ஆண்டு விழாவில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது; மறுபகுதி இங்கு தரப்படுகிறது :—

“நாம் இங்கே கூட்டம் நடத்துவதை சில காங்கிரஸ்காரர் விரும்பவில்லை என்று இங்கே சொன்னார்கள். அவர்கள் விரும்பாததைப்பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை; ஆனால் அவர்கள் விரும்பியிருந்தால் நான் ஆச்சரியப்பட்டிருப்பேன். ஏனென்றால், நம்முடைய நாட்டிலே இன்னும் அரசியல் நாகரீகம் வளரவில்லை. அரசியல் நாகரீகம்வளராததற்குக் காரணம் நம்மிடத்தில் தனிப்பட்டவர்களிடத்திலே இருக்கிறகுறை என்று நான் சொல்லமாட்டேன், நாட்டிலே மொத்தமாகவே அந்த அரசியல் நாகரீகம் வளரவில்லை. அரசியல் நாகரீகம் வளர்ந்த நாட்டில், ஒரு கட்சிக்காரர் மறுகட்சிக்காரர் சொல்லுவதைத்தான் கேட்பதிலே நாகரீக உணர்ச்சியைக் காட்டுவார்கள்.

எப்படி என்றால், காஞ்சீபுரத்திலே நாயனாப்பிள்ளை இருந்தார்கள்; பெரிய சங்கீதவித்வான்; அவர் சங்கீத வித்வானாக இருந்ததோடுகூட நல்ல நாகரீக உணர்ச்சி படைத்த காரணத்தால், ஆண்டுக்கு ஒரு தடவை தியாகராசர் திருவிழா நடத்தி, அவரேகூட—அந்தக் காலத்திலே அவர்தான் தலை சிறந்த சங்கீத வித்துவான்; அவரிடத்திலே பிச்சை கேட்டுத்தான் மற்றவர்கள் பாட்டுக் கற்றுக் கொள்ளவேண்டும்; அப்படிப் பட்ட கியாதி அவருக்கு அந்தக் காலத்திலேயே இருந்தது என்றாலும், சாதாரண வித்துவான்களைக்கூட — தன்னிடத்திலே பாடம் கேட்கின்றவர்களைக்கூட - தன்னைவிடக் குறைவாகப் பாடுகின்ற வித்துவான்களைக் கூட ஆண்டுக்கு ஒருமுறை வரவழைத்துத் தியாகராசர் பெயராலே நடைபெறும் திருவிழாவில், அவர்களை யெல்லாம் பாடச் செய்து, எதிரிலே உட்கார்ந்துகொண்டு ஆனந்தமாகக் கேட்பார். அவர்கள், எதிரிலே நாயனாப் பிள்ளை இருக்கின்றாரே என்ற சங்கோசத்தால் கொஞ்சம் கூச்சப்பட்டுப் பாடினால் இவரே அவர்களைப் பார்த்து, ‘பலே பலே’ என்பார் —‘சபாஷ் சபாஷ்’ என்பார் — ‘அருமை அருமை’ என்பார். இப்படி எல்லாம் உற்சாகப்படுத்திவிடுவார்—அது அவர் சிறந்த சங்கீத வித்துவான் என்பதை மாத்திரம் காட்டுவதல்ல; ஒரு பெரிய மனிதர் என்பதைக் காட்டுவதாகும்.

“அதே முறையில் அரசியல் கட்சிக்காரர்கள் எந்த அரசியல் கட்சி தன்னைப் பெரிய கட்சி என்று கருதுகின்றதோ, எந்த அரசியல் கட்சி சங்கீதத்திலே எப்படி நாயனாப் பிள்ளை சிறந்தவரோ அதைப்போல நாம் தான் அரசியலில் சிறந்தவர்கள் என்று கருதுகின்றார்களோ, அப்படிப்பட்ட பெரிய கட்சிக்காரர்கள், நாயனாப் பிள்ளை எப்படி மற்ற சங்கீத வித்துவான்களைப் பாடச் சொல்லி மகிழ்ந்தாரோ, அப்படி, பெரிய கட்சிக்காரர்கள் எங்களை வரவழைத்துப் பேசச் செய்து மகிழவேண்டும். இது தான் அரசியல் நாகரீகம். அந்த அரசியல் நாகரீகம் இல்லாத காரணத்தினால்தான், ‘இவர்கள் வரக்கூடாது — அவர்கள் வரக்கூடாது’ என்று சொல்லுகிறார்கள்.

“காங்கிரசைப் பற்றியும் தெரிந்துகொள்ளாமல், எங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளாமல், ‘அவர் சொல்லுகிறார்—ஆகையினால் காங்கிரஸ்தான் நல்லது; இவர் சொல்லுகிறார் — ஆகையினால் கம்யூனிஸ்டு நல்லது ; இவர் சொல்லுகிறார்—ஆகையினால் தி. மு. கழகம் நல்லது; பக்கத்து வீட்டுக்காரர் சொல்லுகின்றார்—ஆகையினால் எல்லாம் நல்லது’ என்று இப்படி ஒரு அரசியல் குழப்பம் இருப்பதைவிட அரசியல் கூட்டங்களைக் கேட்டுக் கேட்டு நீங்கள் தெளிவு பெற்றால் உண்மையிலேயே ஒரு கட்சியில் உறுதியோடு இருப்பதற்கு உங்களுக்குச் சிறந்த வாய்ப்பு கிடைக்கும்.

“இன்றையத்தினம் பல காங்கிரஸ் நண்பர்களை நான் சந்திக்கின்றேன். சந்திக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு இருக்கின்ற காங்கிரஸ் பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால்—இந்தப் பகுதியிலே இருக்கிற ஒரு காங்கிரஸ் நண்பர், நான் தேர்தலிலே நிற்கப் போகிறேன் என்று கேள்விப்பட்டதும், என்னிடத்திலே முதல் முறையாகப் பேசுகின்றபோது சொன்னார்—‘அண்ணாத்துரை, நீ தேர்தலில் நிற்பது மெத்த மகிழ்ச்சி; ஆனால் சட்டசபைக்கு நிற்பானேன்? பார்லிமெண்டுக்கு நில்லேன்?’ என்றார். ‘ஏன்?’ என்று நான் கேட்டேன். ‘பார்லிமெண்டு பெரிய இடம்; இந்த சட்டசபை என்ன—சாதாரண இடம்; இதற்கா நீங்கள் போவது? அங்கே அல்லவா போகவேண்டும்?’ என்றார். இவர் ஏன் இப்படிக் கூறினார் என்று பிறகு ஆராய்ந்து பார்த்தேன்; இங்கே அவருக்கு வேண்டியவர் சட்டசபைக்கு நிற்க இருக்கின்றார் என்ற காரணத்தினாலேயும், காங்கிரசின் பேரால் பார்லிமெண்டிற்கு நிற்பவரிடத்தில் இவருக்கு ஏதோ கோபம் இருக்கின்ற காரணத்தினாலேயேயும் — எனக்கும் அழகேசனுக்கும் போட்டியிருந்தால் நல்லது; எனக்கும் டாக்டர் சீனிவாசனுக்கும் போட்டியில்லாமல் இருந்தால் நல்லது—என்ற எண்ணத்திலேயே பேசியிருக்கிறார் என்பதை நான் ஊகித்துக்கொண்டேன்.

“ஏன் நான் இதைச் சொல்லுகின்றேன் என்றால், காங்கிரசினிடத்திலே இருக்கிற பற்றுதல் அந்தவகையிலேதான் இன்றையத் தினம் இருக்கிறது!

“இந்தப் பகுதி பெரிய காங்கிரஸ்காரர்கள் வாழுகின்ற பகுதி என்று சொன்னார்கள். இந்தக் கூட்டத்தை நான் பார்க்கின்றேன்—கதர் அணிந்தவர்கள் மிகமிகக் குறைவாக இருக்கின்றார்கள். ‘கூட்டத்திலே உன்னுடைய கட்சிக்காரர்கள்தான் வந்திருப்பார்கள்; ஆகையினால்தான் கதர் தெரியவில்லை’ என்று என்னுடைய காங்கிரஸ் நண்பர்கள் வாதாடினால், சாதாரண காலத்திலே இந்தத் தெரு வழியாக நான் பல தடவை போயிருக்கின்றேன் — பச்சையப்பன் கல்லூரியிலே நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில், ஒரு சின்ன மாட்டுவண்டி கட்டிக் கொண்டு இந்தப் பக்கத்திலே போயிருக்கின்றேன்—ஒரு ஒட்டைச் சைக்கிளிலே இந்தப் பக்கத்திலே போயிருக்கின்றேன்—அரசியலில் ஈடுபட்ட ஆரம்ப காலத்தில் இந்தப் பகுதியிலே நடந்து போயிருக்கின்றேன் — எந்த நாளிலேயும் அதிகமான அளவுக்குக் கதர் அணிந்தவர்களை இந்தப் பக்கத்திலே நான் பார்த்ததில்லை.

“ஆகையினால், காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள்; ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்கள் அல்ல!”

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு	ரூ.	அ.	பை
28—2—57 இதழ்ப்படி	... 66,921	8	1
துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மூலம்: ரூ. 2450—9—0.			
சி. எஸ். திராவிடமணி ...	1	0	0
தாஜ்மகால் மன்றத்தின் செயலாளர் ...	2	0	3
திண்டிவனம் எம். முருகேசன் ...	1	2	0
நெல்லை-கிழ. ஈரல் வேல் வெள்ளைச்சாமி நினைவு மன்றம் ...	5	0	0
மயிலை-குயப்பேட்டை செந்தமிழ் மன்றம் —கன்னியப்பன் மூலம்: ...	1	0	3
இரயில்வே தொழிலாளர் பி. துரைவேல் ...	1	0	0
அரக்கோணம் செயராமன் ...	1	0	0
நெல்வயல்ரோடு, 6-வதுவட்டம் வி. கே. ஆறுமுகம் ...	1	0	0
சென்னை-பெரம்பூர் பேரக்ஸ் எம். கோதண்டராமன் ...	1	0	0
சென்னை 32-வதுவட்டம் ரொ. இராமதாஸ் ...	1	0	0
சென்னை-சூளை சௌந்திரபாண்டியனார் படிப்பகம் வி. சுந்தரம், பரமசிவன் ...	2	8	0
சென்னை மரகதமணி ...	6	0	0
,, தே. லோகநாதன் ...	1	0	0
,, ஆந்திரேயமுதலூர் ...	3	0	0
திருச்சி பொ. ஆதனூர் தி. மு. கழகம் ...	20	0	0
முதலூர் ஸ்ரீபன் ...	1	0	0
எலந்தங்குளம் ஜி. எ. அப்பன் ...	21	0	0
சின்னசேலம் தி.மு.க.—வாசுதேவன் மூலம்:...	1	0	0
சென்னை பவர் அவுஸ் தோழர்கள் ...	54	0	0
ஸ்பென்சர் தொழிலாளர் சார்பில் ஆர். டி. பாலகிருஷ்ணன் மூலம்: ...	104	8	0
44-வதுவட்டம் குடிசை வாழ்பவர் ...	4	1	0
திருவள்ளூர்பெரியகுப்பம்பகுத்தறிவுமன்றம்...	28	1	0
திருச்சி-வரகூர் தி. மு. கழகம் எ. இராமசாமி மூலம்: ...	23	12	3
சென்னை பென்னி இஞ்சினீயரிங் ஒர்க்ஸ் தொழிலாளர் சார்பில்—கே. பானு மூலம்: ...	101	6	6
சென்னை-பெரம்பூர் தி. மு. கழகம் ...	30	0	0
,, தோழர் மோகன் ...	20	0	0
,, வண்ணை நண்பர் கழகம் ...	101	0	0
மலையாண்டிக்கவுண்டனூர்-சாமிக்கண்ணு கவுண்டர் ...	10	0	0
சென்னை-சைதை சி. ஐ. டி. ராசாமணி ...	3	0	0
குருகல்பட்டி-பெ. அ. அண்ணாமலை ...	3	0	0
சென்னை இரயில்வே தொழிலாளர் ...	793	0	0
பூத்துறை பி. கே. வீரராகவலு ...	100	0	0
சென்னை-பெரம்பூர் மருதமுத்து ...	11	0	0
,, முத்து நி. சிவராசன் ...	13	0	0
கோகலே ஹால் கூட்டத்தில் பொதுச்செயலாளர் மூலம்: ...	51	0	0
சுந்தரம், வேலுச்சாமி ...	31	0	0
சென்னை புத்தகவெளியீட்டார் அச்சகச் சார்பாக திரட்டிய தொகையில் ஒருபகுதி —முரசொலி பதிப்பகம், கே. வி. கே. சாமி பதிப்பகங்கள் மூலம்: ...	101	0	0
சென்னை-1 தோழர் மோகன் ...	10	0	0
சென்னையில் வாழும் இடையக்கோட்டைத் தோழர்கள் ...	27	2	0
எஸ். ஹாரிஸ்-பிளட்சர் ...	100	0	0
வளவனூர் கூட்டம்—மு. கருணாநிதி மூலம்: ...	100	0	0
தேவபாண்டலம் ,, ...	560	0	0

ஆக மொத்தம் ரூ. **69,372-1-4**

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13.

இலங்கைத் தமிழர் மொழிப் போராட்டம்

போலீசாரின் முதல் நடவடிக்கை

கொழும்பு, பிப். 26—

இலங்கையில், சிங்கள மொழி ஆதிக்க வெறியை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் நடத்தி வரும் போராட்டங்களில் இப்போது போலீசார் தலையிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன் வந்திருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

மோட்டார் கார்களில் சிங்கள எழுத்துக்கள் பொறிக்கப்படுவதை எதிர்த்துத் தமிழர்கள் தங்கள் கார்களில் தமிழ் எழுத்துக்களைத் தாங்கிய அட்டைகளையும் தகடுகளையும் மாட்டி தங்கள் எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளனர்,

கடந்த ஒரு திங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் போராட்டத்தில் இப்போதுதான் முதன் முதலாகப் போலீசாரும் தலையிட்டு அதன் விளைவாக இலங்கை சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. வன்னியசிங்கம் எம்.பி. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

தமிழில் எண் பொறிக்கப்பட்ட தகடு பொருத்தப்பட்ட தமது கார் ஒன்றில் அவர் வந்துகொண்டிருக்கும்போது, போலீஸ் பிரதம இன்ஸ்பெக்டர் அவரை வழி மறித்து அவரது லைசென்சை பறிமுதல் செய்துள்ளார் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

அண்ணு தொகுதியில்

மின்னல் வேகப் பிரச்சாரம்

★

தாமல்:

கடந்த 23-ந் தேதியன்று மாலை 6 மணியளவில் தாமலில் அண்ணு அவர்களை ஆதரித்து ஓர் மாபெரும் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அண்ணு அவர்களும், தோழர் க. அன்பழகன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

ரெட்டிப்பேட்டை:

அன்று இரவு 9 மணிக்கு ரெட்டிப்பேட்டையில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் கழகத் தேர்தல் ஈடுபாட்டினை விளக்கி, அண்ணு அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுமாறு பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ரெட்டிப்பேட்டையை அடுத்த கிராமங்களில்:

24-ந் தேதியன்று ரெட்டிப்பேட்டையை அடுத்த சில கிராமங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் தோழர் டி. கே. சீனிவாசன் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். அங்கு தோழர் டி. ஜெயசுந்தர பாகவதர் அவர்களின் 'தேர்தலில் நாம்' என்ற காலட்சேப நிகழ்ச்சியும் நடைபெற்றது.

★

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி

மாணவர் நிதியளிப்பு

காஞ்சித் தொகுதியில் போட்டியிடும் அண்ணு அவர்களுக்குத் தேர்தல் நிதியாக காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சார்பில் ரூ. 100 தரப்பட்டது. அண்ணு அவர்களை ஆதரித்து கல்லூரி மாணவர் சார்பில் ஒரு தேர்தல் கூட்டம் நடைபெற்றது.

நிதியைப் பெற்றுக்கொண்டு அண்ணு அவர்கள், மாணவர்களைப் பாராட்டி, அவர்களுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

தேசீய ஏடுகளின் இழிசெயல்

கழகத்திற்கு மக்கள் ஆதரவு பெருகுவதைக் காணப்பொருததின் விளைவு

சேந்தமங்கலத்தில் நடந்தது என்ன?

தேர்தல் நெருங்க நெருங்க, கழகத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதைக் காணப்பொருத 'தேசீயவாதிகள்' கழகத் தோழர்களையெல்லாம் இழிவாகப் பேசுவதுடன் மட்டும் நின்று விடாது பலமான தாக்குதல்களிலும் இப்போது ஈடுபட்டிருக்கின்றனர். அதே நேரத்தில் காங்கிரசாரின் இந்த நேர்மையற்ற போக்குகளையெல்லாம் திரையிட்டு மறைத்து, அவர்களுடைய செய்கைகளுக்குப் பக்கபலமாக நின்று ஆதரவு தந்து, உண்மை நிகழ்ச்சிகளை திரித்துக் கூறுவதிலும் தேசீய ஏடுகள் இப்போது ஒன்றேடு ஒன்று போட்டியிட்டுக்கொண்டு முன்னணியில் வந்து நிற்கின்றன.

கடந்த 26-ந் தேதி வெளியூர் 'நவ இந்தியா' இதழில் மின்னும் பள்ளி கிராமத்தில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, தி. மு. கழகத் தோழர்கள் கலவரம் நடத்தினர் என்ற கருத்துப்பட ஒரு செய்தி வெளியிட்டு அந்த நிகழ்ச்சியுடன் சேலம் மாவட்டச் செயலாளரும் சேந்தமங்கலம் தொகுதி அபேட்சகருமான திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்களையும் தொடர்புபடுத்தியிருக்கிறது.

அங்கு நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் இவைதான் என்று எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், சேந்தமங்கலம் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகப் பொறுப்பாளர் தோழர் ஆறு. முத்துசாமி நமக்கு தந்துள்ள தகவல்களைக் கீழே தருகிறோம்:-

"சேந்தமங்கலம் சட்டசபைத் தொகுதியைச் சேர்ந்த மின்னும் பள்ளி கிராமத்திற்கு, மேற்படி சம்பவம் நடைபெற்ற 21-ந் தேதியன்று திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் செல்லவே இல்லை. அன்று கலவரம் நடைபெற்ற நேரத்தில் அவர், மின்னும் பள்ளிக்கு சுமார் 15 கல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். மறுநாள் பகல் 2 மணிக்கு திரு. சோமசுந்தரம் அவர்கள் சேந்தமங்கலம் தேர்தல் அலுவலகம் வந்த பின்னர்தான் நான் அவரிடம் இந்தக் கலவரம் பற்றிய செய்தியைக் கூறினேன். எனவே கலவரத்திற்கும், தோழர் சோமசுந்தரம் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

நடைபெற்றது என்ன?

"கடந்த 21—2—57 இரவு 8 மணிக்கு கழகப் பிரச்சார வண்டி, மேற்படி கிராமத்திற்கு அக்கிராமக் கழகத் தோழர்களின் அழைப்பின் பேரில் சென்றது. கிராமத்தின் எல்லையில் பிரச்சார வண்டி சென்றதும் அக்கிராம தி. மு. கழகக் கிளைச் செயலாளர் தோழர் நடேசன், மற்றும் பொதுமக்கள் அனைவரும் வரவேற்று கொள்கை முழக்கங்களுடன் ஊருக்குள் அழைத்துச் சென்றனர். அப்போது அவ்வூர் காங்கிரஸ் அனுதாபியான குமாரசாமி என்பவர் கையில் நீண்ட ஒரு கத்தியேந்திக் கொண்டு, வண்டி முன் நின்று வண்டியை மறித்து ஊருக்குள் செல்லக்கூடாதென மறுத்தார். அவ்வண்டியில் சென்ற கழகத் தோழர் வீரமுத்து அவர்கள் குமாரசாமி அவர்களை அணுகி, அமைதியான முறையில் அன்போடு வண்டியை வழிவிடுமாறு பணிந்து கேட்டுக்கொண்டும் கூடப் பயனில்லை. அவர் பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி மீண்டும் வண்டியை மறிக்கவே, தோழர் நடேசன், அவரை பாதையை விட்டு விலகும்படி கையால் தள்ளினர். உடனே குமாரசாமி கையிலிருந்த கத்தியால் தோழர் நடேசனைக் கொலை செய்யும் எண்ணத்துடன் ஓங்கவே அருகில் நின்ற மற்றத் தோழர்கள் அவரைப் பிடித்துத் தள்ளி தோழர் நடேசனைக் காப்பாற்றியிருக்கின்றனர். இதனிடையில் குமாரசாமியின் அருகில் நின்று கொண்டிருந்த அவரது தந்தையாரும் கழகத் தோழர்களை தடிகொண்டு தாக்கினர். இதனுல் பெரியசாமி என்ற கழகத் தோழருக்கும் மற்றும் ஒருவருக்கும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

சம்பவத்திற்கானகாரணம்

"கிராம தி.மு. கழகச் செயலாளர் நடேசனை அவ்வூர் காங்கிரஸ் பிரமுகர்கள் பலரும்—அத்தொகுதி காங்கிரஸ் அபேட்சகர் உட்பட சென்று சாதீய முறையில் தங்களுக்கு வாக்களிக்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டும் தோழர் நடேசன் மறுத்து, கழகத்திற்காகப் பணியாற்றுவதால் வெகுளியும்அழுக்காறும்கொண்டு இந்த இழிசெயலில் ஈடுபட்டிருக்கின்றனர். அத்துடன் மட்டுமல்லாது இச்சம்பவத்துடன் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்களையும் பிணைத்து மாசு கற்பிக்கும் எண்ணத்தில் பத்திரிகைகளுக்கும் பொய்ச்செய்தி தந்திருக்கின்றனர்."

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காங்கிரஸ் கண்துடைப்பு

காங்கிரஸ் மேலும் ஆட்சியிலமர்ந்தால் பழங்குடி மக்கள் வாழ்வில் இருள் சூழும்

திரு. நாச்சியப்பன் எச்சரிக்கை

"பத்தாண்டுக் காலமாகக் காங்கிரஸ் ஆட்சி இந்த நாட்டில் நீடித்திருந்தும், இன்றுவரை தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு உருப்படியான எந்த ஒரு நன்மையையும் செய்து தரவில்லை; ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கண்துடைப்புக்காக ஓரிரண்டுகாரியங்களைச் செய்துவிட்டு இப்போது தேர்தலின்போது நமக்கு எல்லாம் செய்துவிட்டதாகச் சொல்லுகின்றனர், காங்கிரசார்.

"இலங்கையிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட நமது தமிழக சகோதரர்களின் கதி என்ன என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன். அவர்களில் பாதிப்பேருக்கும் மேலாகப் பம்பாய், மற்றும் இடங்களுக்குப் பிழைக்கச் சென்றும், அங்கும் வேலையில்லாமல் திண்டாடும் நிலையை நாம் பார்க்கிறோம்; இவர்களுடைய துயர் துடைத்து அவர்கள்தம் நிலையான வாழ்வுக்கு எவ்விதப் பரிகாரமும் தேட மனமற்ற இந்த சர்க்கார் இன்னும் ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆட்சியில் அருமானுல் நிச்சயம் நம்வாழ்வில் மேலும் இருள் சூழப் போகிறது என்பதில் சிறிதும் ஐயம் வேண்டாம்.

"எனவே, நம் வாழ்வில் அக்கரையும் நமது நிலையில் கவலையும் கொண்டு, சமுதாயத்திலே நல்லதோர் மறுமலர்ச்சியும் காணவேண்டுமென்ற கொள்கையுடன் இடையருது பாடு படும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே ஆதரவு தந்து, கழகத்தின் அபேட்சகர்களை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆலம்பட்டு கிராமத் தோழர் எ. எஸ். நாச்சியப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனி என்ன குறைவு?

கை நுட்பத் தொழிலாளர்கள் 'கடைத்தேறி'விடுவர்!

சென்னை, பிப். 28—

சமீபத்தில் நடைபெற்ற மாநாடொன்றில், ரூ. 88 இலட்சம் செலவில் 4 ஆண்டு காலத்தில், ஆண்டுக்கு 1,200 கை நுட்பத் தொழிலாளருக்குப் பயிற்சியளிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாம்.

மத்திய அரசாங்க உதவியுடன் சென்னை மாநிலத்திற்குப் பட்டுத் தொழில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாம்.

மார்ச் 4: வரலாற்றுப் பெருமைக்குரிய தேர்தல் நாள்!

அண்ணு தொகுதியில் அன்று வாக்குப் பதிவு

சி. வி. எம். அண்ணுமலே, அம்பில்-தருமலிங்கம் ஆகியோரும் களம் புகுவர்

தமிழகத்தில் துவங்கியுள்ள பொதுத் தேர்தல்களின் இரண்டாம் கட்டம் மார்ச் 4-ம் தேதியன்று துவங்குகின்றது. அன்று, பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் தேர்தல் சின்னம், நமது தோழர்களே எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன. தடித்த எழுத்துக்களில் உள்ளவை பாராளுமன்றத் தொகுதிகள்.

தொகுதிகள்	கழக அபேட்சகர்	சின்னம்	எதிர்த்துப் போட்டியிடுவோர்
செங்கற்பட்டு	....	......	....
1. காஞ்சீபுரம்	அண்ணு	உதயசூரியன்	பி. எஸ். சீனிவாசன் (காங்); கே. எஸ். பார்த்தசாரதி (கம்) மற்றுமிரு சுயேச்சைகள்.
2. மதுராந்தகம் (பொது)	கோதண்டன்	உதயசூரியன்	வெங்கடசுப்பா ரெட்டி (காங்); ஓ. என். துரைபாபு (சோஷ); வி. எல். ராஜா (கா. சீ. க.).
,, (தனி)	அங்கேசன்	யானே	ஜோதி வெங்கடாசலம் (காங்); எல்லப்பன் (கா. சீ. க.).
3. பொன்னேரி (பொது)	டி. சண்முகம்	உதயசூரியன்	கோவிந்தசாமி நாயுடு (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்.
,, (தனி)	செங்கம்	சேவல்	டி. பி. ஏழுமலே (காங்); சி. கே. மாணிக்கம் (கம்); மற்றுமிரு சுயேச்சைகள்.
4. ஸ்ரீபெரும்புதூர்	சி. வி. எம். அண்ணுமலே	உதயசூரியன்	எம். பக்தவத்சலம் (காங்); வெங்கடாசல நாய்க்கர் (க. சீ. க.); மற்ருெரு சுயேச்சை.
கிருஷ்ணகிரி	இரா. செகநாதன்		சி. ஆர். நரசிம்மன் (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
1. கிருஷ்ணகிரி	நாராயணன்	உதயசூரியன்	எஸ். நாகராஜமணிகர் (காங்); என். மோகன்ராம் (கா.சீ.க.); மற்ருெரு சுயேச்சை.
2. பெண்ணுகரம்	என். பி. முனுசாமி	உதயசூரியன்	ஹேமலதாதேவி (காங்); மற்றும் 6 சுயேச்சைகள்.
3. தர்மபுரி	பி. எம். குப்புசாமி	உதயசூரியன்	எம். கந்தசாமி கண்டர் (காங்); மற்றும் 2 சுயேச்சைகள்.
பெரம்பலூர்	....	......	....
1. லால்குடி	அம்பில் தருமலிங்கம்	உதயசூரியன்	எஸ். லாசர் (காங்);
2. டி. பழூர்	எஸ். இராமசாமி	உதயசூரியன்	சுப்பையா (காங்); சின்னசாமி கா. சீ. க.)
3. அரியலூர்	நாராயணன்	உதயசூரியன்	ராமலிங்க படையாச்சி (காங்); மற்றும் 6 சுயேச்சைகள்.
4. பெரம்பலூர் (பொது)	ஆதிமூலம்	உதயசூரியன்	கிருஷ்ணசாமி (காங்); ராஜா சிதம்பரம் (கா. சீ. க.); மற்றும் 2 சுயேச்சைகள்.
,, (தனி)	இரத்தினசாமி	தானியம் தூற்றும் விவசாயி	பெரியண்ணன் (காங்); மற்றும் 7 சுயேச்சைகள்.
ஸ்ரீவில்லிப்புத்தூர்	....	......	....
1. சிவகாசி	ஏ. சுப்பையா	உதயசூரியன்	எஸ். இராமசாமி நாயுடு (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்.
2. ஸ்ரீவில்லிப்புத்தூர் (பொது)	மா. குருசாமி	உதயசூரியன்	ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (காங்); எஸ். அழகர்சாமி (கம்); மற்றும் 3 சுயேச்சைகள்.
,, (தனி)	எஸ். செல்லேயா	சேவல்	ஏ. சின்னசாமி (காங்); ஏ. சிங்கப்பன் (கா. சீ. க.); மற்றும் 2 சுயேச்சைகள்.
3. கோயில்பட்டி	அ. சு. கி. பொன்னுசாமி	உதயசூரியன்	செல்வராஜ் (காங்); அழகிரிசாமி (கம்); மற்ருெரு சுயேச்சை.
4. கடம்பூர் (பொது)	வே. மு. மாரியப்பன்	உதயசூரியன்	இராமசுப்பு (காங்); மற்றும் 2 சுயேச்சைகள்,
திருச்செந்தூர்	....	......	....
1. கன்னியாகுமரி	எஸ். எம். குமாரசாமி	உதயசூரியன்	நடராசன் (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்.
கோபிச்செட்டிப் பாளையம்	....	......	....
1. பவானி (பொது)	சென்ருயன்	உதயசூரியன்	ஜி. ஜி. குருமூர்த்தி (காங்); ஒரு சுயேச்சை.
2. கோபிச்செட்டிப் பாளையம்	சி. ஈ. கன்னியப்பன்	உதயசூரியன்	பி. ஜி. கருத்திருமன் (காங்); மாரப்பன் (கம்); மற்ருெரு சுயேச்சை.

★

தி. மு. கழக ஆதரவாளர்கள்

செங்கற்பட்டு (பொது)	ஏ. கிருஷ்ணசாமி	சைக்கிள்	ஓ. வி. அழகேசன் (காங்); மற்ருெரு சுயேச்சை.
,, **(தனி)**	என். சிவராஜ்	சேவல்	மரகதம் சந்திரசேகர் (காங்)
செங்கற்பட்டு (தனி)	ஏ. இரத்தினம்	சேவல்	அப்பாவு (காங்); பரமசிவம் (கா. சீ. க.)
ஸ்ரீவில்லிப்புத்தூர் (பொது)	வி. வி. இராமசாமி		எஸ். எஸ். நடராசன் (காங்); ஏ. சீனிவாசன் (கம்); மற்ருெரு சுயேச்சை.

தேர்தல் கூட்டங்கள்

மயிலே-குயப்பேட்டை:

2—3—57 இரவு 8 மணிக்கு சென்னே—மயிலே குயப்பேட்டை வீரப்பெருமாள் கோவில் தெருவில், தி. மு. கழக அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களே ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் வ. கிருட்டிணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. பாலகிருட்டினன், கோகுலகிருட்டிணன், கோதமன் ஆகியோர் பேசுவர்.

நம்மாள்வார்பேட்டை:

2—3—57 மாலே 6 மணியளவில் சென்னே நம்மாள்வார்பேட்டை சின்னபாபு தெரு கழகப் பணி மனே அருகில், தி. மு. கழக அபேட்சகர் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களே ஆதரித்து நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. எஸ். கோவிந்தராசன், பி. எம். கருணுகரன் (தெலுங்கில்) ஆகியோர் பேசுவர்.

வண்ணே

2—3—57 இரவு 7 மணிக்கு, சென்னே - வண்ணே கிருஷ்ணு டாக்கீஸ் பக்கத்திலுள்ள பென்ஷனர் லேன் திடலில், 7-வது வட்டத் தி. மு, கழகச் சார்பில் தோழர் ஜி. எம். கான்நாசீர் தலைமையில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழியர் அருண்மொழி, தோழர் பி. எம். கருணுகரன் (தெலுங்கில்) ஆகியோர் பேசுவர்.

சிந்தாதிரிப்பேட்டை:

2—3—57 மாலே 6-30 மணியளவில் சென்னே—நேப்பியர் பார்க் அடுத்த பழனியாண்டவர் கோயில் அருகில், கலேவளர் மன்றச் சார்பில் நடைபெறும் கூட்டத்தில் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், என். சீவரத்தினம், டி. கே. வேணுகோபால், அ. பொ. அரசு ஆகியோர் பேசுவர்.

இராயப்பேட்டை:

2—3—57 மாலே 6 மணிக்கு, சென்னே 37-வது வட்டம் இராயப்பேட்டை (புதுப்பேட்டை) பிரசன்னவிநாயகர் கோயில்தெரு எதிரில் தோழர் ச. சோ. சந்திரோதயம் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கோ. இளவரசு, லோகிதாசன் ஆகியோர் பேசுவர்.

காசிமேடு

2—3—57 மாலே 6 மணிக்கு, சென்னே - இராயபுரம் காசிமேடு பெரியதம்பி தெருவில், தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். சிவரத்தினம் அவர்களே ஆதரித்து தேர்தல் கூட்டம் தோழர் காசிமேடு இளம்பரிதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. கே. வில்வம், அன்புரோசு, சத்தியநாதன், து. தமிழ்ச்செல்வன், தி. நா. மதிவாணன், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவர். தோழர் இராதாமனுளன் இயக்கப் பாடல் பாடுவார்.

ஒற்றைவாடை:

2—3—57 மாலே 6 மணிக்கு சென்னே ஒற்றைவாடை கொட்டகைக்கு அருகில் பொன்னப்பச் செட்டித் தெருவில் பேசின் பிரிட்ஜ் தொகுதி அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்களே ஆதரித்து 27-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் இராமசாமி தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ப. உ. சன்முகம், ஏ. கே. வில்வம், தோழியர் அமுதா ஆகியோர் பேசுவர். மாஸ்டர் ஆர். கோவிந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

பெத்துநாய்க்கன்பேட்டை:

2—3—57 இரவு 7½ மணிக்கு பெத்துநாய்க்கன்பேட்டை கிருஷ்ணப்பநாய்க்கன் அக்கிரகாரம் தெருவில் தோழர் சி. ஆர். சந்திரசேகரன் தலைமையில் 8-வது வட்ட தி. மு. கழக ஆதரவாளர் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். அருணகிரிநாதர், ப. உ. சன்முகம், எஸ். ரெங்காச்சாரியார் ஆகியோர் பேசுவர். தோழர் இராதாமாணிக்கம் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

பழனி

2—3—57 மாலே 5 மணிக்கு பழனி தேரடித் திடலில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக்கூட்டம் நடைபெறும். கடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் நோபி. ஜி. என். இராசு, சி. வெங்கிடுசாமி ஆகியோர் பேசுவர். கூட்டத்தில் இசையரசு தண்டபாணி அவர்கள் இன்னிசை வழங்குவார்.

பழவேற்காடு

2—3—57 மாலே 5 மணிக்கு பழவேற்காடு திரு. வி. க. திடலில் தி. மு. கழக அபேட்சகர்கள் கு. சன்முகம், ஓ. செங்கம்ஆகியோரையும், ஆதரவாளர்கள் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, என். சிவராஜ் ஆகியோரையும் ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் இரா. சு. சு. மணி தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. கே. வில்வம் பேசுவார்.

குடியாத்தம் தொகுதியில் தேர்தல் கூட்டங்கள்

மார்ச் 2: காலே 7 மணி: பாலூர்; 8-30: மணி; மேல்வழித் துணையாங்குப்பம்;10 மணி: மேல்பட்டி; 11-30 மணி: வளத்தூர்; பகல் 12-30 மணி: செட்டிகுப்பம்; மாலே 3 மணி: முற்குன்றம்: 4-30 மணி: செங்குன்றம்; 6 மணி: செல்லூர்பேட்டை.

(இக்கூட்டங்களில் தோழர்கள் ஏ. எஸ். இமயவரம்பன், மணிமொழியன், அமிர்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.)

கழகத் தோழருக்கு

முஸ்லிம் லீக் ஆதரவு

வ. ஆ. மாவட்டம் வாணியம்பாடி சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர் தோழர் எம். பி. வடிவேலு அவர்கட்கு ஆதரவு தந்து 2-3-57 இரவு 7 மணிக்கு சந்தை மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் முஸ்லீம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் பேசுவார்.

கோவை--குணியமுத்தூர்

2-3-57 மாலே 6-30 மணிக்கு கோவை ரூரல் தொகுதி தி. மு. கழக அபேட்சகர்கள் தோழர்கள் கே. சு. இராசமாணிக்கம், ஆர். கே. சடையப்பன் ஆகியோரை ஆதரித்து குணியமுத்தூரில் நடைபெறும் தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் மே. சி. சிதம்பரனுர், தங்கமாணிக்கம் ஆகியோர் பேசுவர்.

ஊர்வலம்

3—3—57 மாலே 5 மணிக்கு தோழர் க. இராமு தலைமையில் சைக்கிள் ஊர்வலமும் நடைபெறும். தோழர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் கிளே அலுவலகங்கள் திறப்பு விழா

2—3—57 மதுரை மத்தியத் தொகுதியில் இளங்கோ மன்றம், தமிழ்மன்றம்மேலாவணி மூலவீதி ஆகியஇடங்களில்தி.மு.கதேர்தல் கிளே அலுவலகங்கள் திறப்புவிழா நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் தோழர்கள் எஸ். முத்து, டி. கே. சீனிவாசன், கன்னதாசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னே) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.